செய்தி தாளாக பதிவுபெற்றது

சிவமயம்

இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஆவணிமீ 28-ம் உ அச்சகம்: சைவபபிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அள] யாழ்ப்பாணம்: இராக்ஷத ஆவ புரட்டாதி மீ 10 உ வெள்ளிக்கிழமை (26-9-1975) [இல: உரு

மாற்றத்தால் மறுமலர்ச்சி உடனேவந்துவிடும் என்றார்களே!

வாழ்க்கைச் செலவு வளருவதேன்?

ஏதாவது ஒரு அரசியல் மாற்றம் ஏற்பட்டால் உடனடியாகப் பொருளாதார நிலைமையிலும் ஒரு ஏற்றம் அல்லது வீழ்ச்சி ஏற்படுவது சகசம்.

இம் மாதம் நிகழ்ந்த அமைச்சர் அவை மாற்றத்தினால் வாழ்க்கை விரய விகிதம் குறையும் என்று கூறி வந்தனர் அரசியல் விமர்சனர்கள். மூன்னாள் நிதியமைச்சரின் திட்டங்களே வாழ்க்கைச் செலவைப் படிமேற்றிய தென்பது அவர்கள் விளக்கம்.

ஆனால் அரிசியும் விலை, அவலும் விலை. எள் நெய்யும் விலை எதுவும் விலை. காய், கனி, கிழங்கு மாவும் விலை. மாற்றம் மறு பக்கமாகாது தடுப்பது அரசினர் கடமையல்லவா.....? அக விலையேற்றம் சமயப் பயிற்சியையும் தாக்குகின்ற தென்பதை அரசினர் அறிய வேண்டும்.

பண்டார நாயக நினைவு தினமாகிய இன்று இதற்கோர் பரிகாரம் தேடுவதே மறைந்த தலைவருக்கு செய்யும் முதல் மரியாதையாகும்.

அருணகிரிநாதர் 600-வது ஆண்டுவிழா

—0—

சிவபூஜாதுரந்தரர்களுக்கு அழைப்பு.

மேற்படி விழா கார்த்திகைத் திங்கள் 7, 8, 9 ம் திகதிகளில் (7-11-75 — 9-11-75) நடைபெற உள்ளது. விழாவின் மூன்று தினங்களும் திருமுருகப்பெருமானுக்கும், அருணகிரிநாத சுவாமிகட்கும் நாத உபாசனையும், திருப்புகழ் அஞ்சலியும் நடைபெற உள்ளது. இவ் அஞ்சலியில் கலந்து அருள்பெற விழையும் சங்கீத வித்வான்கள், பண்ணிசைச் செல்வர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

மேலும் அருணகிரிநாத சுவாமிகளின் ஜென்ம நட்சத்திரமான மூல நட்சத்திரம் கூடும் 7-11-75 வெள்ளிக்கிழமை காலை நடைபெறவுள்ள சிவபூஜையில் சிவபூஜா துரந்தரர்கள் கலந்து ஆத்மீகப் பிரார்த்தனை செய்யவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி பூஜையில்கலந்து கொள்ள விழையும் சிவபூஜா துரந்தரர்கள் தயை கூர்ந்து கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

மயில். அமிர்தலிங்கம்
செயலாளர்/அமைப்பாளர் விழா அமைப்புக் குழு, யாழ். இந்து இளைஞர் மன்றம், 29, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

இன்று மூன்னாள் முதல் அமைச்சர் திரு. S. W. R. D. பண்டாரநாயகா இறந்த தினம் நாடெங்கும் நினைவு கூரப்படுகின்றது.

திருநாளைப்போவார் திருநாள் வழிபாடு

திருநாளைப்போவார் நாயனாரது குருபூசை வழிபாடு யாழ். நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் (இன்று) 26-9-75 மாலை நிகழும். சைவ சமய அபிவிருத்திக் கழகத்தினரின் பஜனையும் இடம்பெறும் ——

தக்காரைப் போற்றுதல் தகவுடையோர் கடன்

அமரர் முகாந்திரம் பிரம்மஸ்ரீ யா. தி. சதாசிவ ஐயர் நினைவு தினம்

(மல்லையூர். திரு. அ. சரவணமுத்து)

1. இருபதாம் நூற்றாண்டில் அரசாங்க உத்தியோகத்தில் அமர்ந்துகொண்டு, தமிழ், சம்ஸ்கிருதம், சைவம் இம் மூன்றின் வளர்ச்சிக்காகத் தொண்டாற்றிய தமிழ்ப் பெரியார்கள் மிகச் சிலரேயாவர். அவர்களுள் ஒருவராக முகாந்திரம் பிரம்மஸ்ரீ யா. தி சதாசிவஐயர் அவர்களைக் கணிக்கலாம். அவர் தோற்றி இன்று 93 ஆண்டுகளும் இவ்வுலக வாழ்க்கையை நீத்து 25 ஆண்டுகளும் சென்று விட்டன. தமிழ் உலகம் சிறந்த அரும் பெருஞ் சேவை புரிந்த ஒரு பேரறிஞரை இவ்வளவு காலமும் மறந்திருப்பது பெருங் குறையேயாகும்;

இளந்தலைமுறையின் ஏற்றமான கடமை?

2. அவருடைய சிரார்த்த திதி இராட்சத வருடம் கார்த்திகைத் திங்கள் 5-ஆம் நாள் (1975—11—21) ஆகும். அவரை நன்கு அறிந்த அறிஞர்கள் அவர் மறைந்த திதியன்று இளைஞர்கள் சமூக மறியும் வண்ணம் அவருடைய வாழ்க்கை வரலாற்றை வானொலி, பத்திரிகைகள், பிரசங்கக்கூட்டங்கள் மூலமாக வெளியிட வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

மும்மொழி வித்தகர் முயன்ற தொண்டுகள்!

3 ஐயரவர்கள் மல்லாகம் ஆங்கில வித்தியாசாலையில் தலைமையாசிரியராகவும், கந்தரோடை ஆங்கில வித்தியாசாலையில் ஆசிரியராகவும் சில வருடங்கள் கடமை

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

யாழ் மாநகர் தரும் அரிய காட்சி

"சென்னையிலேயே இருக்கின்றேன் என - எனக்குத் தோற்றுகிறது"

யாழ்நகர். இசைவிழாவில் தமிழக வயலின் மேதை

"யாழ்ப்பாணமாநகரம் இப்பொழுது சென்னை மாநகரம்போலக் காட்சிதருகிறது. இசை வளர்ச்சியிலும் ஈழம் பெருமைபெறக்கூடிய அளவுக்கு முன்னேறியிருக்கிறது; இந்த அரங்குக்கு புகழ்மிக்க தவில் மேதை தெட்சணமூர்த்தியின் பெயரை வைத்துள்ளமை மிகமிகப் பொருத்தமாகும். இப்பொழுது நான் சென்னை மாநகரில் இருப்பதாகவே கருதுகிறேன் — என்னையும் ஒரு பொருளாக மதித்துக் கௌரவித்தமைக்காக இம் மன்ற நிர்வாகிகள் அத்தனை பேருக்கும் என் உளங் கனிந்த நன்றியைத் தெரிவிக்கிறேன் — யான் முன்பு 1949 - இல் ஈழத்துக்கு வந்திருந்தேன. அப்பொழுது ஒரு சில இசை வித்துவான்களைப்பற்றித்தான் அறிந்திருந்தேன். இன்று ஈழத்தில் பல்வேறு மன்றங்கள் இசை வளர்ச்சிக்காக அயராது உழைத்து வருவதையும் இங்குள்ள இசை அறிஞர்கள் இசை வளர்ச்சியில் முன்னணியில் நின்றுழைப்பதையும் அறிந்தனும் என் உள்ளமெல்லாம் பூரிப்படைகிறது"

இவ்வாறு உணர்ச்சிததும்பக் கனீர் என்ற குரலில் கூறினார் தமிழகத்தைச் சேர்ந்த வயலின மேதை உயர்திரு. எஸ். அனந்தராமன் அவர்கள்.

என் குருமூர்த்தியான கருர் சுந்தரமையர் அவர்களுக்கு முதற்கண்வணக்கம். எனத் தம் உரையை ஆரம்பித்த திரு. அனந்தராமன் தொடர்ந்து பேசும்போது,

"ஈழத்து இரசிகப்பெருமக்களுக்கு ஒரு தனிப்பெருமையுண்டு; அவர்கள் இசையை எவ்வளவு போற்றுகிறார்கள்? நேற்றையதினம் இசை விழா மண்டபத்துள் வராமல இரசிகப்பெருமக்களுடன வெளியே நின்று இரசித்தேன். காரணம என்னிடம் சில மாதங்கள் வயலின் பாடம் பயின்ற ஈழத்து மாணவன் திரு. இராதாகிருஷ்ணனின் வயலின் நிகழ்ச்சி அபாரமாக நிகழ்ந்துகொண்டிருந்தது. அவர் எனக்கு நற்பெயரை வாங்கித்தந்துள்ளார். இங்கு மட்டுமன்றி ஈழத்தின் மாநகரங்கள் கிராமங்கள் பட்டினங்கள் தோறும் இசை விழாக்கள் நிகழவேண்டும்; இம் மன்றத்திறபோல எங்களும் இசை வளர்க என எல்லாம வல்ல சரஸ்வதி தேவியையும், குமரப்பெருமானையும் ஸ்ரீ நடராசமூர்த்தியையும் பிரார்த்திகின்றேன். உங்கள் மன்றத்தின் அரியபணியைமனமார வாழ்த்துகிறேன்" என்றார்.

யாழ். அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தின ஏழாம் நாள் விழாவில் பாவையாளராகச்சபையில அமர்ந்திருந்த வயலின் மேதையை இரசிகர்கள் மேடைக் கழைததுச் சென்று சபையோர்க் கறிமுகஞ செய்து வைத்து மலர் மாலைகள சூட்டிக கௌரவித்து மகிழ்ந்தனர, வயலின் வித்துவானவர்களின் ஆசிமொழிகளை இரசிகர்கள் விரும்பியபோதே மேற்கண்டவாறு கூறினார்கள்.

எதிர் பாராத வருகை

தொடர்ந்து பேசிய வயலின் மேதையவர்கள், நான வேறு மன்

[வளர்ச்சி 3-ம் பக்கம்]

நவராத்திரி வரதம்

புரட்டாதிமீ 19 ஆம் உ 5-10-75 ஞாயிறு நவராத்திரி பூசை ஆரம்பதினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

இராக்ஷத ௵ புரட்டாதி மீ ௧௦-௨ வெள்ளி

பண்ணிசைப் பாடவகுப்பு பாடசாலைகளில் வேண்டும்

புது முறைக் கல்வித் திட்டத்தில் ஓவியம், நடனம் இசை முதலியனவற்றிற்கு இடமுண்டு. இதற்காகப் பொருத்தமான ஆசிரியர்களையும் அரசினர் நியமித்து வருகின்றனர். இசை பயிற்றுவிக்கும் தராதரமுடையவர்கள் பழம் பெருமை வாய்ந்த திருவருட் சிறப்புடைய பண்ணிசையையும் கற்பிக்கும் ஆற்றல் உள்ளவர்களாய் இருந்தால் மாணாக்கர்கள் உயர்ந்த சங்கீத உணர்ச்சியும் தேர்ச்சியும் பெறுவார்கள். இசைப் பாடத் திட்டத்திற் பண் முறைக்கோர் இடம் வகுக்கப்படாதிருக்கின்றதென்ற காரணத்தாற் பண் இசைப் பயிற்சி அளிக்க ஆசிரியர்கள் முற்படாதிருக்க வேண்டியதில்லை! இசையை இலக்கியமாக இலக்கணம் அமைத்துக் கற்பிக்கும் முறையே முறை. இதற்கு அடிப்படையாகப் பண்ணிசைஞானம்வேண்டுமல்லவா?

ஆகவே இசை ஆசிரியர்கள் பண்ணிசை பயின்றவர்களாக இருத்தல் மிக மிக அவசியமாகின்றது. அண்ணாமலைப் பல்கலைக் கழகம்போல இசைக் கல்விக்கு உயர்ந்த இடம் கொடுத்திருக்கும் நிலையங்களிலே பண்ணிசைப் பயிற்சியும் அளிக்கப்படுவது பொருத்தமாயிருக்கும். ஓதுவார் மூர்த்திகள் ஆசிரியராக அமைந்து பண்ணிசைப் பயிற்சிக் கழகத்தை நிறுவுவதும் ஒரு வழி. பல்கலைக் கழகப் பட்டம் பெற்ற இசையாசிரியர்கள் ஓதுவார் மூர்த்திகளிடமும் கலந்து கலை நுண்ணியலை மேலும் அறிந்துகொள்ள முடியும்

இசைக் கல்விக்கோர் இலட்சியமிருத்தல் வேண்டும். இனிய குரலுடன் இராகமும் இலயமும் பொருந்தி விட்டால் மட்டும் அமையாது இப் பயிற்சி. பழம் தமிழ் நூல்களிலே இசைக்கு, கருவிகளுக்கு ஏற்ற இலக்கணம் வகுத்த புலவர்கள், பண் முறையின் இன்றியமையாயை உணர்த்தியிருக்கின்றனர்.

பாட்டெல்லாம் பாட்டாகுமா? சீரும் அடியும் சேர்ந்து விட்டாற் செய்யுளாமோ? அவ்வாறே தாளமும் இராகமும் ஓரளவிலிருந்தால் அதைச் சங்கீதமென்று சொல்லிவிடலாமா? முத் தமிழின் வித்தகத்தை விளக்கும் இயல், இசை, நாடகம் என்ற முறையே மூலமாகக் கல்விக் கமைத்தல் முதன்மையாகும் ஆகவே இசைப் பயிற்சிக்கு ஆர்வம் காட்டும் மாணாக்கர்களை நெறியான கல்வி கற்க வைத்தல் கழகங்களின் கடமையாகும்

அரசினர் இவ்வொழுங்கை அமைப்பதற்குச் சமய சபைகளும் இலக்கிய நிலையங்களும் இசை மன்றங்களும் இடித் திடித்து விண்ணப்பஞ் செய்து வருதல் ஒருமுறை. அரசின் கடமையென்று வாளாவிராது பாடசாலைத் திட்டத்திற்குப் புறம்பாகப் பண்ணிசைப் பயிற்சி வகுப்புகளை வகுத்தல் இன்னொரு முறை. எம் முறையாகினும் இம் முறை இயங்க வேண்டும். இசை இசையாக இலங்க வேண்டும். தப்பிசையாவதைத் தவிர்த்தல் சைவ மக்களின் கடமை.

தக்காரைப் போற்றுதல்

(1-ஆம் பக்கத்து வளர்ச்சி)

யாற்றியுள்ளார், அதன்பின் 17 வருடம் வித்தியாதரிசகராகவும், 15 வருடம் மாவட்ட வித்தியாதரிசகராகவும் சிறந்த தொண்டு புரிந்துள்ளார். அவர் செந்தமிழ் வடமொழி, ஆங்கிலம் என்னும் மூன்று பாஷைகளிலும் விற்பன்னராயிருந்தமையால், ஆசிரிய உலகம் அவருக்குப் பெருமதிப்பை அளித்தது.

நாட்டுப்பாடல்களை நயம்படத் தொகுத்தார்

4. அவரது அரிய முயற்சியால் தமிழ், சம்ஸ்கிருதம் வளர்ச்சிக்காக இரு இயக்கங்கள் யாழ்ப்பாணத்தில் தோன்றின. ஒன்று சுன்னாகம் பிராசீன பாடசாலை, மற்றது ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம், இக்கல்லூரியிற் பல மாணவர்கள் படித்துத் தமிழ் சம்ஸ்கிருதப் பண்டிதர்களாய்த் தேறினார்கள். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திக் சங்கத்துக்கு முதற் கௌரவ செயலாளராயிருந்து, பழைய சங்க இலக்கியமாகிய ஐங்குறுநூறு, சின்னத்தம்பிப் புலவர் இயற்றிய கரவை வேலன்கோவை முதலிய நூல்களை அரும்பதவுரையுடன் வெளியீட்டார். அவரது தளரா உழைப்பினால் அவரையே ஆசிரியராகக் கொண்டு 'கலாநிதி' என்ற சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டது. அவருடைய மிகச் சிறந்ததொண்டு, மட்டக்களப்புப் பகுதியில் வழங்கும் நாட்டுப் பாடல்களைத் தொகுத்து. அவைகள் அழிந்து போகாவண்ணம், புத்தக ரூபமாக வசந்தன் கவித்திரட்டு என்னும் நாமத்துடன் வெளியிட்டது. பாடசாலைகளில் தமிழ் இலக்கியம் இலக்கணம் படிப்பிப்பதற்கு உதவியாகத் தமிழ் மொழிப் பயிற்சியும் தேர்ச்சியும் என்ற பாடப் புத்தகம் அவரது இன்னொரு சிறந்த வெளியீடு.

இவரது படைப்புகள் வெளிவரவேண்டும்!

ஐயரவர்கள் கவி இயற்றுவதில் மிகச் சிறந்தவர். வடமொழியில் பாண்டித்தியம் பெற்றிருந்தமையால், தேவி தோத்திர மஞ்சரி, இருது சங்கார காவியம், தேவி மானசபூசை அந்தாதி முதலியவைகளை மொழிபெயர்த்து யாத்து வெளியிட்டுள்ளார். பெருமாக் கடவைப் பிள்ளையார் இரட்டைமணிமாலை, இன்னும் வெளிவராமலிருக்கும் கதிர்காமவேலவர் இரட்டைமணிமாலை, மேகதூதம் அவரியற்றிய அரிய படைப்புகளாகும்.

இப் பெரியார் கல்விப் பணிக்காகச் செய்த மாபெருந்தொண்டுகளை நன்கு மதித்த அரசினர் 1944-ஆண்டில் முகாந்திரம் என்னும் பட்டத்தை அளித்தனர். கல்வியறிவு, ஒழுக்கம் நேர்மை நடுவுநிலைமை வீரம் அனைத்தும் ஒருங்கு பெற்ற ஐயர் அவர்களைப் போல் ஒருவரை இக் காலத்தில் காண்பது அரிது என்று கூறுதல் மிகையாகாது. அன்பு ததும்பும் இனிய சுபாவமுடையவர். சொல் வன்மையினால் எவரையும் தன் வசப்படுத்திக் கொள்ளுவார். இத்தகைய உத்தமராய் விளங்கிய ஐயரவர்களை நமது இத் தலைமுறை மறப்பது நீதியாகுமா? அன்னார்க்கு நாம் செய்யக்கடிய கைம்மாறென்ன? அறிஞருலகம் சிந்தித்து ஆவன செய்யவேண்டும்.

கார்த்திகேயன்

[நவாலியூர் சோ. நடராசன்]

அவன் ஒரு தெய்வக் காதலன்
கற்றவை கரையில, கருத்தில் மறந்து
உற்றதொரு பொருள் கண்டான், உணர்ச்சியில்
அடிமுடி தேடியவமரர் வாயடங்க
நால்வர் வாய்மொழி நாவிற் கரைந்துநற்
காட்சி பெற்றுலகு மறைந்திடக் களித்தான்,
நண்பனு மாகியென் னன்னைகுடல் விளக்காம்
துணைவனுமாயினன் தோலா நாவினன்
எத்தனை யிரவவ னின்னுரை கேட்டேன்
எத்தனை பகலவ னின்றமிழ் மாந்தினன்
சொல்வது கேளாய் சுயவறிவேலாய்
என்ன செய்குவை யென்றுவாய் பாடாய்
நன்றே சொல்வான் நகை மலரரும்ப
நீடுவாழிய வவன் நில்லாவுலகில்
பட்ட பெருமரம் துளிர்த்தது போல
பழம்பெருங் கல்வியும் பண்பும் துளிர்த்துப்
பாசாங்கறியாப் பான்மையி லொதுங்கி
தன்னலம் பிறரறியாவகை தளைத்து
வெஞ்சுரங்கடந்து தண்ணிழல் சேர்ந்தான்
வேண்டுவ துண்டுகொல் வேறேயுலகில்
அழுங்கவுமில்லை நானிரங்கவுமில்லை
என்னிலவன் நிலைத்திட்டான் நானவன்
தன்னில் நிலைத்தனனொன்று மொன்றிலையே.

பனைவளம் பெருகபாடுபடுவோம்

குறைந்த செலவில் சிறந்த முகவணிப்பொடி செய்யமுடியும்!

புலோலி கிழக்கிலுள்ள ஞான சம்பந்தர் கலை மன்றத்தின் விசேட பொதுக் கூட்டம் ஒன்று சென்ற 21-9-75 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகி இரவு 8 மணிவரையும்நடைபெற்றது. மில்க்வைற் தாபதாபனத்தாரின் ஆதரவில் இக் கூட்ட நிகழ்ச்சிகளை நீர்வளப் பாதுகாப்புப் பகுதியைச் சேர்ந்த திரு. நடன சபாபதி ஒழுங்கு செய்திருந்தார். ஏராளமான ஆண், பெண் பிள்ளைகள் கூடியிருந்த கூட்டத்திலே பொருளாதார வளம், உணவு உற்பத்தி உணவு தயாரிப்பு ஆகிய விடயங்கள் நடைபெற்றன.

திருவாட்டி வேதவல்லி கந்தையா அவர்கள் மரவள்ளிக்கிழங்கையும் பனங்காயையும் பலவித உணவுகள் தயாரிப்பதற்கான மூலப்பொருள்கள் எனப் பேசியும் செயல் முறையில் சில உணவுகளைத் தயாரித்தும்காட்டினார், பனை ஆராய்ச்சிப் பண்டிதர் சு. பரநிருபசிங்கம் அவர்கள் தொழில் முன்னிலைக் கல்வியைப்பற்றிப் பேசிச் செலவுக்குச்சுருக்கமாக முகவணிப் பொடி செய்யும முறையினைச் செய்து காட்டினர். காணி அதிகாரி, திரு. மு. தம்பிமுத்து நமது பிரதேசத்தில் பனைவளம் பெருக வேண்டிய அவசியத்தையும் பனம் விதைகளை நாட்டி எம் வளத்தைப் பெருக்க வேண்டியதேவையையும்கூறி திரு. கனகராசா அவர்கள் பனம் விதைகளை நாட்டும் பணியில் தீவிரமாயிருப்பதைச் சுட்டிக் காட்டி இவரை எம்மவர்கள் பின்பற்றுவது நலம் என்றார்.

நாற்பதாண்டு நற் பணி

சைவப்பிரகாச அச்சகத்திலே நாற்பதாண்டுகள் தொடர்ந்து பணியாற்றிய திரு. சு. சி. சுப்பிரமணியம் அவர்கள் வயது வேலைவரம் பினைத் தாண்டிய வகையிலே ஓய்வெடுத்தமை குறித்து அச்சக அலுவலாளர்கள் அவருக்கொரு பிரியாவிடை அளித்தனர். அவ்வமையம் இந்துசாதன ஆசிரியர் குறிப்புக்கூறும பொழுது சைவப் பிரகாச அச்சகத்துக்கோர் தனிமதிப்புண்டு என்றும் அது ஆங்கு பணியாற்றுபவர்கள் பலரும் நெடுங்கால அங்கத்தவர்களாயிருப்பதிலிருந்து புலப்படும் என்றும் திரு. சுப்பிரமணியம் அமைதியாய் அடக்கமாய் அலுவல்களை மேற்கொண்டதன் பயனாக அச்சகத்திலுள்ளவர்கள் எல்லோரின் மதிப்பைப் பெற்றிருக்கின்றனர் என்றும் சுட்டிக்காட்டி ஓய்வெடுத்தபின்னும் அச்சகத்தொண்டு செய்யமுற்படுவதும் ஓர் பண்பாகும் எனச் சொல்லிப் பல்லாண்டு வாழ்த்தினர்.

அச்சகம் சார்பாக ஒரு அன்பளிப்பும் நிகழ்ந்தது.

திரு. கா. இரகுநாதன் பேசும்போது: 'எல்லோருடனும் தோழனாகப் பல்லாண்டு பணியாற்றிய நண்பனை அச்சகம் என்றும் மறவாதென்றும் — திரு. சுப்பிரமணியமும் அச்சகத்தை மறக்க முடியாதென்றும் கடமை உணர்ச்சி யுள்ளவராயும் — இலட்சிய வாதியாயும் திகழ்ந்த இவர் 'இந்துசாதன'த்தின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டக் காலத்தின் போதும் முன்னணியில்நின்று தம் சுற்றத்தாருடன் உழைக்கத் திருவருளைப் பிரார்த்திப்பதாகக் கூறினர். ——

அணிந்துரை

"இலங்கை இந்து"

ஆவணிச் சதுர்த்தி மேவு நன்னாளில் இலங்கை இந்து மாமன்றம் பிரசுரித்த திங்கள் வெளியீட்டைப் பெற்றேம். மனமுவந்து வரவேற்கின்றேம்.

சங்கங்கள் மன்றங்கள் ஆகியவற்றுக்குச் சாதனங்கள் இன்றியமையாதவை. செயற்றிட்டத்தையும் சிந்தனைகளையும் மக்களுக்கு எடுத்துக் காட்டும் ஏடுகள் பயன் கொடுப்பன.

எண்பத்தாறாண்டுகள் இயங்கி இலங்கி வரும் "இந்து சாதனம்" இதுவரை பலப் பல வெளியீடுகளை வெவ்வேறு வேளைகளில் வரவேற்று வந்திருக்கும் முதுமை வாய்ந்ததாகையால் இப்பொழுது உதயமாகும் இலங்கை இந்துவையும் இன்புற்று ஆதரித்து வரவேற்கின்றது.

'இந்து நெறி' யை வளர்க்கும் நோக்கமுடைய 'இலங்கை இந்து' ஆக்கம் பெற இறைவனை இறைஞ்சுகின்றேம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல: ஈடு 14446.

1. கந்தையா செல்லத்துரை கொக்குவில் கொக்குவில் மேற்கு
எதிராக
1. சிதம்பரப்பிள்ளை முத்தையா சிவசுப்பிரமணியமும் பெண்
2. மகேஸ்வரியும் வட்டுக்கோட்டை துணைவி
- பிரதி வாதிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் ஈடு 14446-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு தண்டுக் காணியை 1975 ம ஆண்டு ஐப்பசி மீ 18-ஆந் திகதி (18-10-75) சனிக்கிழமை முற்பகல் 11-00 மணி அளவில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னல் விற்கப்படும்.

மேற்குறித்த பிரதிவாதிகள் குறித்த வாதிக்கு ரூபா 5,009/- மும் மேலும் 2,500/- வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12 வீத வட்டியும் வழக்கு அளித்த திகதியாகிய 1974 ம் ஆண்டு ஜூலை மாதம் 5 ந் திகதியிலிருந்தும் தீர்வைத் திகதியாகிய 1974 ம் ஆண்டு நவம்பர மாதம 21ந் திகதி வரையுமான வட்டியும் அதன் பின் தீர்வை முழுத் தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 622-75 கொடுக்க வேண்டி யிருப்பதாலும் செலவு தொகையில் ரூபா 50/ — கொடுபட்டிருப்பதாலும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வட மேற்கு இறை. நீர் கொச்சித் தாழ்வு D 266/39 ல்.

பதிவு செய்யப்பட்ட நில பர 9 குளி 2½. ஆனால் அளவைப் படி நில. பர, 9 குளி 9 . 7 இதில் கிழக்குப் பகுதியாக அறுதி விற்றதும் சீதனம் கொடுத்ததும் கை யொழுங்கைக்கு விடப்பட்ட நிலமுமாக நில. பர 6 குளி 10 . 5. நீக்கி மிகுதி மேற்குப்பக்க மாக நில பர 2 குளி 17 . 2, இந்த நிலப் பரப்பு 2 குளி 17.2 க்கும் எல்லை கிழக்கு தியாகராசா பெண் புவனேஸ்வரியினுதனமும்' இக் காணிக்கும் கிழக் கெல்லைக் காணிக்கும் பொதுப் பாவிப்புக்கென வைக்கப்பட்ட கை யொழுங்கை முகப்பும் வடக்கு நமசிவாயம் பெண் பொன்னம்மா வின் உரிமைக்காரருக்குரிய ஆதனம். மேற்கு கந்தசாமி பெண் செல்லம்மாவினுதனம் தெற்கு கந்தையா செல்லத்துரைக்கும் மற்றபேருக்குமுரிய ஆதனம். இதடங்கலும் குறித்த கையொழுங்கை பாவிபுரித்தும், கிழக்கெல்லைக் காணிகளுள் இருக்கும் கிணற்றில் இதற்குள் கிணறு வெட்டும்வரை தண்ணீர்ப பங்கும் வழி வாய்க்கால் உரித்தும்.

கா. முத்துக்குமாரு ஐயர்
"தங்கவேல் ஆலயம்" நீதிமன்ற ஆணையாளரும்
"சன்னிதி வேல்" விலை மதிப்பாளரும்
பருத்தித்துறை. 18-9-75 81. 26-9.

பிரிவிடுதல் நொத்தீஸ்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்

புலோலி மேற்கு குமாரசாமி வேலாயுதம்
இல. 12976
வாதிகள்

எதிராக

1. புலோலி மேற்கு குமாரசாமி ஏரம்பமூர்த்தி
2. ,, குமாரசாமி சதாசிவம்
3. புலோலி தெற்கு வேலன் கதிரன்
4. ,, கிட்டினன சண்முகம
5. ,, பெண் செல்லமமா
6. ,, செல்லன் முருகன
7. ,, பெண் பூபதி
8. ,, முருகன் சன்னதி
9. ,, பெண் வள்ளிப்பிள்ளை
10. ,, ஆழ்வான் சின்னதம்பி
11. ,, பெண் நாகி
12. ,, வேலன் பசுபதி
13. ,, பெண் இலட்சுமி
14. ,, சின்னட்டி மகள் மதுரம்
15. ,, சின்னட்டி கிட்டிணன்
16. ,, சின்னட்டி நடேசன்
17. ,, சின்னட்டி வேலாயுதம்

பிரதிவாதிகள்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி பருத்தித்துறை கோயிற்பற்று புலோலி மேற்கு மழவராய குறிச்சியிறை நதிநின்ற கலட்டி நிலா. 23½ எனும் ஆதனம் 1951-ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச் சட்டத்திற் கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தில் ஓர் பிரிவிடுதல வழகுத தொடாந்திருக்கிற தென்று இத்தாலுமக்கறிவிக்கப் பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் பிரதிவாதிகள் மேற்படி கோட்டில் 1975-ம் ஆவு ஐப்பசி மீ 3 10 மணிக்குச் சமுகமளிக்கும்படி சட்டளை பண்ணப்பட்டிருக்கிறார்கள்.

1975-ம் ஆவு புரட்டாதி மீ 18 தயாரித்தவர்

வழக்காளியின் தரணி
கோட்டாரின கட்டளைப்படி
K. Kanagarajah
பிரதமலிகிதர்

வேலணை திருஞான சம்பந்தர் மடாலயம்

சரவணை நாச்சிமார் கோயில் பரிபாலன சபையினது நிருவாக சபைக் கூட்டம் 21-9-75 ஞாயிற்றுக்கிழமை பிற் பகல 5 மணி அளவில் கோயில் மண்டபத்தில் நடைபெற்றது. கோயில் திருப்பணிகளும கும்பாபிஷேகத்திற்கும நிதிசேர்க்கும் ஒழுங்குகள செய்யப்பட்டன, வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையை அரசாங்கம் 1960 ஆம் ஆண்டு கையேற்றபொழுது அவ் வித்தியாசாலையின ஒரு உறுப்பாக இருந்த திருஞானசம்பந்தர் மடாலயக் கட்டிடத்தையும் அரசாங்கம் எடுத்துக்கொண்டது. மேற்படி வித்தியாசாலை முகாமையாளராக அக்காலம் கடமையாற்றிய திரு! மு மயில்வாகனம் அவர்கள் திருஞானசம்பந்தர் மடாலயத்தை புறம்பாக நடத்துவதற்கு வித்தியாசாலை வளவில் இடம் உதவுபடி அரசாங்கதிற்கு மனுச்செய்தனர். அதனை பிரகாரம் அரசாங்கம் மத்தியஸ்தர்சபை ஒன்றை தாபித்தது. அச் சபை விசாரணை செய்து மேற்படி திருஞான சம்பந்தர் மடாலயத்தை நடத்துவதற்கு வித்தியாலய வளவில் இடம உதவும்படி சிபார்சு செய்தது. அதன் பின்னர் திரு மு மயில்வாகனம் அவர்கள் ஒரு தற்காலிக கட்டிடத்தை அமைப்பித்து அதில் தேவார வகுப்பு குருபூசைகள் முதலிய சற் கருமங்களைச் செய்து வருகின்றார். மேற்படி மடாலய பரிபாலனத்தை எதிர்காலத்தில் சரவணை நாச்சிமார் கோயில் பரிபாலன சபை ஏற்று நடத்தலாமென்ற தீர்மானமும் நிறைவேற்றப்பெற்றது.

ஆறுதல் ஓர் அளவு

வைத்திய கலாநிதி (நிபுணர்) என். சுப்பிரமணியம அவர்கள் யாழ் வைத்தியசாலையிலிருந்து மாற்றப்பட்ட பின் நரம்பு மூளை நோயாளர்கள் பெரிதும் அவதிப் பட்டு வருகின்றனர் என்பதை யாவரும் அறிவர்.

மறு படியும் இந்த நிபுணரை இவ் வைத்தியசாலைக்குப்பெற்றுக் கொள்ளப் பல பகீரதப் பிரயத்தனங்கள் செய்யப்பெற்ற பொழுதிலும அநுகூலம் அடையவில்லை.

ஆனால ஒரு ஆறுதல் கிடைத்திருக்கின்றது மாதத்தில் இரண்டு முறை இந்த நிபுணரின் சேவை யாழ் மக்களுக்குக் கிடைக்கக் கூடியதாக ஒழுங்குகள் செய்யப் பெற்றிருக்கின்றன வென்றறிகிறோம்.

யாழ் மாநகர்தரும்

1 ஆம் பக்கத்து வளர்ச்சி

றம் வேறல்ல! — எங்கள் மன்றத்திற்கு வந்து படித்து, உன்னதமாகத் தேறியவர்களுள் ஒருவராகிய திருமதி இரஞ்சனி-சுந்தரலிங்கம் அவர்களது கச்சேரி இங்கு நடப்பதாக அறிந்தே வந்தேன் இது எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத்தருகிறது இங்கு பல இசை வித்துவான்கள இருக்கிறார்கள். அவர்கள எல்லோரையும் எனக்குத் தெரியாது; மகாவித்வான் ந. சண்முகரத்தினம், பொன். சுந்தரலிங்கம் போன்ற ஒரு சிலரையே யான் அறிவேன். இங்கு இசைவளர்ச்சிக்குழைகளும்எல்லா மன்றங்களுக்கும் அதற்கு உதவியாக உள்ள எல்லோருக்கும் என் வாழ்த்துக்கள் உரியது என்று குறிபபிட்டார், வயலின் மேதையின வரழ்த்துரைக்கு மன்றச் சார்பில் நன்றியுரை நவின்ற வயலின் வித்துவான் திரு. சுததி விநாயகம் மகாவித்துவான் அவர்களின் அரியஉரை எம்மெல்லோருக்கும் பேரானந்தத்தையும் மன எழுச்சியையும் தந்துள்ள தாயும, இப் பெரியார் சுறந்த பல கலைஞர்களை உருவாக்கித் தந்துள்ளமையையும இவாகள் கலைக்குச் செய்யும்சேவை அளப்பரியதென்றும், கொழும்பு மாநகரில் நிகழவுள்ள ஒரு அரங்கேற்றத்திற்காக வந்த இப்பெரியாரை தா மெவருமே அறியாது இங்கு அழைத்து வந்து எமமையெல்லாம் மகிழவடையச செய்த அன்பர்களுக்கும்நன்றிகூறி, இவை யாவும் 'திருவருளே' என மகிழ்ந்தனர். நலல ஆதீனத்தில் நிகழ்ந்த இவ் விழாவின இறுதிநாள் நிகழ்ச்சிகளாக சங்கீத பூஷணம் இ. நடராஜன் அவர்களது இசை விருந்தும திரு. பிச்சையப்பா குழுவினரின் முகவீணைக் கச்சேரியும இடம் பெற்றன. தினமும் மண்டபத்துள் கூட்டம தாங்காத வாறிருந்தது! இசை விழா இம் முறை அபாரம் என்ற பேச்சு செவிகளைத் துளைத்தன! ஆம்...! இத்தகைய அரிய நிகழ்ச்சிகளை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தினர் அஞ்சல செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படுவது அவசியம் என்று இரசிகர்கள் பேசக்கொண்டனர் இந்தக் கோரிக்கையை வருங்காலங்களிலாயினும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குச் சுட்டிக் காட்ட ஷி நிர்வாகிகள் முன்வரவேண்டும்.

— 'நாயன்மார் - நாதன்"

கோட்டுக் கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக்கோட்டில்

வழக்கு இலः 12618

(1) பொன்னையா மகேசன் செம்பீசமா - வல்வெட்டி — வழக்காளி
எதிராக
(1) கந்தையா கனகராசா அல்லது தங்கராசா (2) பெண் றுக்குமணி ஊரிக்காடு உடுப்பிட்டி — எதிராளிகள்.

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டாலெமக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனங்களை 1975-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 30-ம் திகதி (30-10-75) வியாழக்கிழமை முற்பகல் 9 00 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று, உடுப்பிட்டிக் குறிச்சியிறை 'கிளுவத்தடி" நிப 37½, இது 1955ம் ஆண்டு, வைகாசி மீ 2ந் திகத் உலாந்தா மேஸ்தர், வே சீவரத்தினமவர்களால் 1496 ம் இலக்கத்தில் அளந்து விந்தாரிக்கப்பட்டதும் குறித்த 4303 ம் இலக்கப்பிரிவிடல வழக்கின கடைசிதீர்வையோடணைக்கப்பட்டதுமான படத்தில் 1 தொடக்கம் 25 வரைக்குமுள்ள துண்டுகள் விசாலம் நிப. 34 குளி 17, 25/32 குறித்த படத்தில் 2ம இலக்கத்துண்டுக்கு நிப. 3 குளி 10, 28/32 இதற்கெல்லை கிழக்கு வயிரமுத்து சிவக்கொழுந்துவுக்கும் பெண் வளளிப்பிள்ளைக்கும் மறுபேருக்கு முரியவாதனமும 23ம் இலக்கத்துண்டும வடக்கு ரோட்டு, மேற்கு மயில்வாகனம் பெண் வள்ளிப்பிளைக்குரிய வாதனம் தெற்கு செல்லையா மதியானந்தகுருவுக்குரியவாதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், கல்வீடு, அடுக்கள மற்றுங்கட்டிடங்கள் அடங்கலும் குறித்த படதில 23ம் இலக்கத் துண்டுக்குளிருக்கும் கிணற்றிலும் தூர்வை நிலத்திலும் இதற்குரிய பங்கும் வழிவாய்க்காலுரிந்தும். (மதிப்பிட்ட விலை ரூபா 20,000/-)

(2) ஷி இறை "மஞ்சக்கொடிக்காடு" நிப. 2 குளி 14, 21/32 இது 1940-10-20ந் திகதி உலாந்தமேஸ்தர் G, C. கணபதிப்பிளை அவர்களால் 6500ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்டதும் 953/Pம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்டதுமான படத்தில் 1ம் 2ம் 3ம 4ம இலக்கத்துண்டுகள் குறித்தபடத்தில் 1ம் இலக்கத் துண்டுக்கு நிப. 2 குளி 4½, இதற்கெல்லை கிழக்கு வல்லிபுரம் மகாலிங்கம் பெண் சாரங்கமமாவுக்குரிய வாதனம். வடக்கு வழிவாய்க்கால், மேற்கு எங்களில் 1ம் பேருக்குமுரிய வாதனம, தெற்கு சிவவயிரமுத்து பெண் சகுந்தலையம்மாவுக்கும் சகோதரிக்குமுரியவாதனம் இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், கிணறு அடங்கலும் குறித்த படத்தில "W" என அட்சரமிடப்பட்ட கிணற்றிலிதற்குரிய பங்கும a, b, c, d என அட்சரமிடப்பட்ட வழிவாய்காலுரித்தும். (மதிப்பிட்ட விலை ரூபா 10,125/-

தீர்லைத் தொகை, முதல் வட்டியுஞ்சேர்த்து	ரூபா 13,700 00
வட்டி ரூபா 10,000/- க்கு 12 வீதபடி 27-2-74 தொடக்கம 10-6-74 வரை	338 00
தொகை	14,038 00
வட்டி ரூபா 14,088/-க்கு 5 வீதப்படி 10-6-74 தொடக்கம் 10-8-75 வரை	818 00
வட்டி ரூபா 14,038/-க்கு 5 வீதப்படி 10-8-75 தொடக்கம் 30-10-75 விற்பனவு வரை	146 20
மொத்தம் ரூபா	15,002 20

க. நல்லலிங்கம்
"சிவலிங்க நிலையம்" கோட்டுக் கொமிஷனரும்
வி எம். ரோட், விலைமதிப்பாளரும்,
பருத்தித்துறை 20-9-75 ஏல விற்பனையாளரும்
82, 26-9

பிரிவிடுதல் நொத்தீஸ்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் புலோலி மேற்கு விசுவநாதன் கனகரத்தினம சுப்பிரமணியம.
இல. 12273
வாதிகள்

1. புலோலி மேற்கு நா. ஆள்வாப்பிள்ளை இராசரத்தினம
2. ஷி பெண் மீனம்மா
3. ஷி வி. கனகரத்தினம் விசுவநாதன்
4. புற்றளை புலோலி தெற்கு வி. கனகரத்தினம் சங்கரப்பிள்ளை
5. புலோலி மேற்கு வி, கனகரத்தினம் சந்திரசேகரம்
6. புலோலி மேற்கு தற்காலம் கண்டி. வி. கனகரத்தினம் சந்திரசேகரம்
7. புலோலி மேற்கு தற்காலம் டேவிற்சன் ரோட் பம்பலப்பிட்டி வி. கனகரத்தினம் கதிர்காமன்
8. புலோலி மேற்கு வி. கனகரத்தினம் கந்தப்பா
9. புலோலி மேற்கு தற்காலம் 12 பொலிஸ் பார்க் அவென்யு. கொழும்பு சங்கரப்பிள்ளை விவேகானந்தன்
10. ஷி பெண் இந்துமதி

எதிரிகள்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி கட்டைவேலி கோயிற்பற்று அல்வாய் மழவராய குறிச்சி இறை வதையவிளானை நி பர 92 குளி 5¼ எண்ணும் ஆதனம் 1951-ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச் சட்டத்திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தில் ஓர் பிரிவிடுதல் வழக்குத் தொடர்ந்திருக்கிறதென்று இத்தாலுமக்கறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் பிரதிவாதி/கள் மேற்படி கோட்டில் 1975-ம் ஆவு ஐப்பசி மீ 10 உ 10 மணிக்குச் சமூகமளிக்கும்படி கட்டளை பண்ணப்பட்டிருக்கிறார்கள்.

கோட்டாரின் கட்டளைப்படி
K. Kanagarajah
for பிரதம லிகிதர்

84 26 பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THOUGHTS TO BE TREASURED

விண்ணினூர் பணிந் தேத்த வியப்புறும்
மண்ணினூர் மறவாது சிவாய என்று
எண்ணினூர்க்கு இடமா(க) எழில் வானகம்
பண்ணினூர், அவர் பாலித் துறையரே.

He who fashioned the wondrous graceful World of Heaven, highly praised by the Devas, for devotees of this terrestial world who incessantly contemplate on the Sivaya-Mantiram to dwell in, He indeed is the Lord of Tiruppalaiturai.

திருமுறைகண்டமை
நமச்சிவாயவே ஞானமும் கலியும்
நமச்சிவாயவே நானறி வித்தையும்
நமச்சிவாயவே நாதனின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.
திருஞானசம்பந்தர்

Hindu Organ

FRIDAY SEPTEMBER 26, 1975

Countering Crime!

WITH rhythmic regularity reports of assassinations and attempted killings scare the common people to such an extent that unless a large scale universal campaign is immediately launched to arrest this evil-ward trend, humanity will eventually become faced with frightful consequences almost amounting to total annihilation.

The motive for murder may be anything; but is this extreme step necessary at all? Senseless activities are being committed in the name of causes-nullifying the justification of the movements it appears as if there is a well trained underground army of murder squads always ready to surprise the entire world. It is in these circumstances that the representatives of humanity, we mean the countries numbering over one hundred and forty that purport to be the United Voice of the peoples of the world should devote their entire attention to the question of negativing the misconceived efforts of miscreants by positive means. The United Nations Organization which is at present sitting in General Session should give priority of consideration to this matter of paramount importance and set up a universal peace-front to counter criminal tendencies by humane methods of redress of grievances.

The film as conscientiously admitted by all has become the most impressive means of making the present generation members of the association of murderers. Banning such shows is the best remedy. But there is the equally effective relief in the form of producing films that depict the dangers of diabolical crimes by the use of deadly weapons in sudden, secret and surprising manner.

Religious organizations must jointly make representations to the U. N. E. S. C. O. for propaganda in this direction making provision for the exhibition of anti-crime films all over the world particularly in schools and social service centres. Associations that are committed to religious propaganda must make themselves useful in this enterprise by formulating schemes of such shows. It is here that religion can play its rightful role.

Letter to the Editor

All Existing Holidays Are Important

Sir,

Mahasivarathiri, Deepavali and Adiammavasai along with Thaipongal and Hindu New Year Day ought to be Public Holidays—In fact the Hindu population requires a considerable number of public holidays in view of the numerous religious occasions when they are expected to discharge their sacred obligations—It is not the employees of Government alone who are concerned. The entire Hindu public is deeply involved and feels very sad that instead of increasing their quota of holidays, existing holidays are sought to be taken away—We are grateful to the "Hindu Organ" and "Inthusathanam" for the editorials on this subject and trust that Government would be pleased to revise its contemplated move.

(S. SIVASUBRAMANIAM)
Life Member Saiva Paripalana Sabhai)
103/2 Hulsdorf Street,
Colombo—12

NOTICE

IN THE DISTRICT COURT OF MALLAKAM

No. P/396

Ganaratnam Selvadurai of Chulipuram
Vs. Plaintiff

1 Theivanaipillai widow of Poologasundram of Chulipuram West
2 Sivakkolunthu widow of Kandasamy, Chulipuram West
3 Ganaratnam Sangarapillai of Chulipuram West
4 Ganaratnam Thirunchelvam of Pannalai Tellippalai

Defendants

It is hereby notified that action No. P/396 has been instituted in the above action under the Partition Act No. 16 of 1951 for the partition of the land called "Endiran" in extent 92 Lms P. C. and situated at Chulipuram, in the Parish of Chankanai in the Division of Valigamam West, in the District of Jaffna Northern Province

The defendants in the aforesaid action are summoned to appear in Court, on the 2nd day of October 1975 at 10 o'clock of the forenoon.

By order of Court
T Kulaveerasingam
Registrar/Court Clerk
This 17th day of July 1975
24 26/9

DANCE OF SHIVA

Dr. Ananda K Coomaraswamy)

(Continued from last issue)

Again Unmai Vilakkam, v 52, 37, 39 inform us

"The Supreme intelligence dances in the soul.... for the purpose of removing our sins. By these means, our Father scatters the darkness of illusion (maya), burns the thread of causality (karma) stamps down evil (mala, anava, avidya), showers Grace, and lovingly plunges the soul in the ocean of Bliss (ananda). They never see re-births, who behold this mystic dance.'

The conception of the world process as the Lord's pastime or amusement (lila) is also prominent in the Shaiva scriptures. Thus Tirumular writes, "The perpetual dance is His play." This spontaneity of Shiva's dance is so clearly expressed in Skryabin's Poem of Ecstasy that the extracts following will serve to explain it better than any more formal exposition—what Skryabin wrote is precisely what the Hindu imager moulded:

"The Spirit (purusha) playing,
The Spirit longing,
The Spirit with fancy (yoga-maya) creating all,
Surrenders himself to the bliss (ananda) of love...
Amid the flowers of His creation (prakriti), He lingers in a kiss....
Blinded by their beauty, He rushes, He frolics, He dances, He whirls....
He is all rapture, all bliss, in this play (lila)
Free, divine, in this love struggle
In the marvellous grandeur of sheer aimlessness,
And in the union of counter-aspirations (dvandva)
In consciousness alone, in love alone,
The Spirit learns the nature (svabhava) of His divine being...
'O, my world, my life, my blossoming, my ecstasy!
Your every moment I create
By negation of all forms previously lived through:
I am eternal negation (neti, neti)....
Enjoying this dance, choking in this whirlwind,
Into the domain of ecstasy, He takes swift flight.
In this unceasing change (samsara, nitya bhava), in this flight, aimless (nishkama), divine
The Spirit comprehends Himself,
In the power of will, alone (kevala) free (mukta),
Ever-creating, all-irradiating, all vivifying,
Divinely playing in the multiplicity of forms (prapancha), He comprehends Himself....

(To be continued)

NOTICE

IN THE DISTRICT COURT OF MALLAKAM

No. P/1621

1 Muthuppillai widow of Yogavanam of Marisankoodal
2 Sivapiragasam Mailvaganam
3 Sivapiragasam Vigneswaran
4 Maheswari daughter of Sivapiragasam
5 Saraswathy daughter of Sivapiragasam
6 Sivapiragasam Veluppillai
7 Gnaneswari daughter of Sivapiragasam all of Marisankoodal presently of Malaysia the 2nd to 7th acting by their attorney.
8 Sellamuthu wife of Swaminathar of Marisankoodal
9 Swaminathar of Marisankoodal

Vs. Plaintiffs

Kandapillai Nagaratnam of Marisankoodal, Ilavalai

Defendant

It is hereby notified that action No. P. 1621 has been instituted in the above action under the Partition Act No. 16 of 1951 for the partition of the land called 'Marisankoodal' also known as "Suppar Kanapathy Valavu" is extent 8 Lms. V, C. with house, and situated at Veemankamam in the Parish of Ilavalai, in the Division of Valikamam North, in the District of Jaffna Northern Province.

The defendant in the aforesaid action are summoned to appear in Court, on the 2nd day of October, 1975 at 10 o'clock of the forenoon.

By order of Court,
T. Kulaveerasingam
Registrar / C C
This 18th day of July 1975
23 26/9

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday September 26, 1975.

EDITOR-IN-CHIEF R. N. SIVAPIRAKASAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org